RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s232

# பாரதியார் பாடல்களில் சக்தி வழிபாடு

**சே. செந்தமிழ்ப்பாவை [அ, *], சே. அறிவுடைநம்பி [அ]**

[அ] தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி- 630003, தமிழ்நாடு, இந்தியா .

# Power worship of Bharatiyar songs

**S. Senthamizh Pavai [a, *], C. Arivudainambi**

[a] Centre for Tamil Culture, Alagappa University, Karaikudi-630003, Tamil Nadu, India

* Corresponding Author: pavaisenthamizh17@gmail.com

Received: 04-01-2021
Revised: 12-04-2021
Accepted: 16-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

Bharathi has sung about the power and Goddesses in his songs. It is noteworthy that most of the deities sung by Bharathi are Female Deities. This article evinces about Bharathi who claims "Sakthi" to be the source of all the powers. The state men and women in worshiping sakthi. She acts as 'Kalaimagal' (Saraswathi) when she gives wisdom, she acts as a 'Thirumagal' (Lakshmi) when shegives wealth and she acts as 'Mother Sakthi' (Parvathi) when she gives valor.

**Keywords:** Vedic principles, Bharatiyar, Thirumagal, Saraswathi

## முன்னுரை

பாரதியார் தம் பாடல்களில் சக்தியையும், அதன்வழிப் பெண்தெய்வங்களையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். பாரதி பாடியுள்ள தெய்வங்களில் பெண்தெய்வங்களே மிகுதியானவை என்பது அறியத்தக்கதாகும். பாரதி பாடல்களில் புலப்படுத்தும் சக்தி, சக்தியின் மூலம், சக்தியின் ஆற்றல், சக்தியின் பொருள், சக்தி வழி புலப்படுத்தும் பொருண்மை ஆகியன குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

## சக்தி வழிபாடு

வழிபாட்டு முறைகளில் அன்னைத் தெய்வத்தை வணங்குவது மிகவும் தொன்மை சான்ற வழிபாடுகளில் ஒன்றாகும். சிந்துச் சமவெளியின் மொகாஞ்சதாரோ, ஹரப்பா முதலான இடங்களில் நிகழ்த்தப் பெற்ற அகழ்வாய்வுகளில் அன்னை வழிபாடு ஆரியர்களின் வருகைக்கு முன்னரே திராவிடப் பண்பாட்டில் வழக்கிலிருந்து வந்துள்ளதனை உறுதிப்படுத்துகின்றன. தாய்வழி ஆட்சிமுறை உள்ள சமுதாய அமைப்பில் சக்தி வழிபாடு தோன்றிப் பரவுவது இயற்கையான ஒன்றாகும்.

திராவிட நாகரிகக் காலத்தில் வாழ்ந்த தொன்மைப் பழங்குடிமக்கள் தாங்கள் வணங்கிய தெய்வத்தை அம்மா அல்லது அம்பா என்று அழைத்துள்ளனர். அதுவே பிற்காலத்தில் சக்தி வழிபாடாக வளர்ச்சியுற்றது. சைவத்தில் கலந்த சிவனுக்கு சாம்ப (ஸூ அம்ப) என்ற பெயரும் வழக்கிலிருத்தலைக் காணலாம்.

ஆரியர் காலத்திற்கும் முற்பட்ட இந்த தாய்த்தெய்வ வழிபாடு தேவி வணக்கமாகவும், அம்மன் வணக்கமாகவும் நாடு முழுவதும் பரவி இன்றைக்கும் வழக்கிலிருந்து வருகின்றது. நமது

கிராமப்புறங்களில் உள்ள பெரும்பான்மைத் தெய்வங்கள் பெண்தெய்வங்களே என்பது கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

## சக்தியே தாய்

அன்னையை வழிபடுவது சாலவும் நன்று என்பதனை,

“உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை

உமையவளென் றறியீரோ”

என்று எடுத்துரைக்கின்றார். பாரதியார் ஓர் ஆன்மீகவாதியாகவே திகழ்ந்தார். அவர் பராசக்தியிடம் கொண்டிருந்த பக்தி அளப்பரியது. மற்றவர்கள் பராசக்தியிடம் கொண்டிருந்த பக்திக்கும் பாரதி கொண்டிருந்த பக்திக்கும் வேறுபாடுகள் பல உள்ளன. ஆன்மீகவாதிகள் இறைவனைப் போற்றித்தொழுது ஆண்டவனிடம் தான் கொண்ட பக்தியை நிலைநாட்டுவர். தன் வழிமுறையினர்க்கும் பக்திப் பாதையைக் காட்டி நெறிப்படுத்துவர். பாரதி பெண்குலத்தை மகாசக்தியாகக் கண்டவர்.

பெண்குலம் உயிரைக் காக்கும் குலம். உயிரினைச் சேர்த்திடும் குலம். உயிரினும் உயிராய் இன்பமாகிவிடும் குலம். உயிரினும் இந்தப் பெண்குலம் இனிதாவது என்பதனை உணர்ந்த பாரதியார்,

“அன்னமூட்டிய தெய்வ மணிக்கையின்

ஆணைகாட்டில் அனலை விழுங்குவோம்

கன்னத்தே முத்தம் கொண்டு களிப்பினும்

கையைத் தள்ளும் பொற்கைகளைப் பாடுவோம்”

என்கிறார்.

## சக்தி வழிபாட்டில் ஆண்-பெண் நிலை

சக்தி வழிபாட்டில் ஆண்கள்-பெண்கள் ஆகிய இருபாலாரும் ஈடுபடலாம். இதன் காரணமாகவே பாரதியார் சக்தி வழிபாட்டினை வலியுறுத்தினார் என்றும் கருத இடமுள்ளது. சக்தி வழிபாட்டின் காரணமாகச் சமூகத்தில் பெண்கள் நிலை மேம்பாடு அடையும். ஏனெனில் சாக்த சம்பிரதாயத்தில் ஒவ்வொரு பெண்ணுமே தேவியின் அம்சம் ஆவர். பெண்கள் குருவினுடைய ஸ்தானத்திற்கும் உயர்த்தப்பட்டு வணங்கப்பட்டனர். ஸ்ரீராமகிருஷ்ணர் தனது பரஞான குருவாக அன்னை சாரதாதேவியார் அமைத்ததும், அரவிந்தர் அன்னை வழிபாட்டைத் தம் ஆசிரமத்தில் ஏற்படுத்தியதும் இதன்பொருட்டே ஆகும். உண்மையான சக்தி உபாசகன் பெண்களைப் போற்றுவான். அவர்கள் முன்னேற்றத்திற்காக உழைப்பான்: அவர்கள் விடுதலைக்காகவும் போராடுவான் என்பதே பாரதியின் கருத்தியலாகும் இதனை,

“காதல் செய்யும் மனைவியே சக்தி, கண்டீர்

கடவுளிலே அவளாலே யெய்த வேண்டும்”

என்று அறிவுறுத்தவும் செய்கின்றார். பெண்மை வாழ்க என்றும், வெல்க என்றும் கூறி நம்மைச் சக்தி வழிபாட்டுக்கு அழைக்கிறார் பாரதியார். மேலும்

“பெண்டாட்டி தனையடிமைப் படுத்த வேண்டிப்

பெண்குலத்தை முழுதடிமைப் படுத்த லாமோ?”

என்று கேட்கிறார்.

பாரதி, புதுச்சேரியில் வாழ்ந்தபோது பாரதிக்குப் பல துறவிகளுடன் தொடர்பு ஏற்பட்டது. அவர்களில் குள்ளச்சாமி, கோவிந்தசாமி என்னும் இருவரும் முக்கியமானவர்களாகவர். பாரதி

அறுபத்தாறு என்ற கவிதைகளில் குள்ளச்சாமியைப் பற்றிக் குறிப்பிடும்போது சக்தியிடம் தனக்கு ஈடுபாட்டை ஏற்படுத்தியவர் என்று அவரைப் புகழந்து கூறுகின்றார்.

"தேனனைய பராசக்தி திறத்தைக் காட்டிச்

சித்தினியில் காட்டி தெளிவ தந்தான்"

சக்தி வழிபாடு புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தல் பாரதியிடம் வெகுவாக இருந்துள்ளது. "புதுச்சேரியில் குடியேறிய தேசபக்தர்களில் வ.வே.சு ஐயருடன் பாரதிக்கு நெருங்கிய நட்பேற்பட்டது. அவர் கொண்டிருந்த காளி பக்தி, மேலும் வளர்வதற்கு ஐயர் காரணமாக அமைந்தார். ஆயுதப் புரட்சியில் நம்பிக்கை கொண்ட தீவிரவாதியாதலால் ஐயர் காளி பூஜை செய்வார். அதில் பாரதி கலந்து கொள்வது வழக்கம். மகாகாளியின் சக்தியால் வீறு பெற்று நாட்டுக்குழைக்க இருவரும் விரும்பினர். பாரதியின் சக்திப் பாடல்கள் பெரும்பாலும் அந்தப் பூஜைக்காகப் பாடப்பெற்றன" 6 என்று சுத்தானந்தர் கூறுகிறார்.

## சக்தி வழிபாட்டில் பாரதி

பாரதியார் தன் கவிதைகளிலும் கட்டுரைகளிலும் ஆங்காங்கே காலத்தின் தேவைக்கேற்ற விதத்தில், பகுத்தறிவுச் சிந்தனையுடன் சக்தியைக் குறித்துப் பேசியுள்ளார். எல்லையற்ற இயற்கையின் ஆற்றல்களை இயக்கும் சக்தியாகத் திகழ்வதால் சக்தியே பாரதியின் பாடல்களுக்குப் பொருளாகியுள்ளாள்.

சக்தி திருப்புகழ் என்ற பாடலில், சக்தி என்றோது என்று பாரதி அறிவுறுத்துகின்றார். சக்தி என்போருக்குச் சாகாவரம் கிட்டும் என்று உபதேசிக்கவும் செய்கிறார். உடலில் சக்தி உள்ளவரை சாவு கிடையாதில்லையல்லவா? சக்தி எனக் கூவினால் உடலில் சக்தி சேறும். துன்பம் தீரும். இன்பம் சேரும்.

சக்தியின் திருப்பெயரை பல முறை கூறினால் ஏற்படும் இனிய உணர்வே உண்மையான சுகமாகும். சுகத்தை இருவகையாகப் பிரிக்கலாம் சில நிமிடங்களில் தோன்றி மறைவது சிற்றின்பம். நம் உடலிலுள்ள எழுபத்திரண்டாயிரம் நரம்புகளும் நீடித்த இனிய உணர்வுடன் இருப்பது பேரின்பம். இந்த இன்பம் பக்தியினால் கிடைத்து தெய்வ வாழ்க்கையுற்று இங்கு வாழ்ந்திட உதவுகிறது. அறிவிலும் இருவகை உண்டு. கண்ணால் காண்பதும், காதல் கேட்பதும் மட்டும் மெய்யென நினைப்பது புலன்வழி அறிவு. இது தரையில் ஊர்ந்துசெல்லும் அறிவு. புலனுணர்வுக்கு அப்பாற்பட்ட அறிவும் உண்டு. அதுவே மண்ணில் தெரியும் வானம். அதுவே மேலறிவு. இந்த மேலறிவைப் பெறவேண்டும். இந்த அறிவு சக்தியைப் போற்றத் தூண்டும். இதனால் சுகம் விளையும். இதனைப் பாரதி,

"................மேலறிவு

தன்னாலே தான்பெற்று சக்திசக்தி சக்தியென்று

சொன்னாலதுவே சுகம்"

என்று கூறுகின்றார். அவ்வப்பொழுது பலபெயர்களைத் தாங்கி நிற்கும் சக்தியைப் பாரதி பல பெயர்களைக் கொண்டு அழைக்கின்றார். எனையாளும் மாதேவி, வீரர்தேவி, இமையவருந் தொழுந்தேவி, எல்லைத் தேவி என்று பெயர்கள் சூட்டி மகிழ்கின்றார். இவற்றோடு பாரதி அறுபத்தாறில் வரிசையாக மாகாளி, பராசக்தி, உமையாள், வைரவி, கங்காளி, மனோன்மணி, மாமாயி என்ற கூறுவதனைக் காணமுடிகின்றது.

சக்தி உபாசகர்கள் எல்லாத் தெய்வங்களையும் வணங்குவர். சக்தியின்றி எத்தெய்வமும் எதுவும் செய்ய முடியதென்பதை அவர்கள் அறிவார்கள். அனைத்துக் கடவுளர்களும் சக்தியின்றி வேறில்லை என்பது அவர்கள் கருத்தாகும். இது பாரதிக்கும் உடன்பாடாக அமைந்திருந்தது. அதனால் தான்,

"சக்தி யென்று புகழ்ந்திடுவோம் முருகன் என்போம்

சங்கரனென் றுரைத்திடுவோம் கண்ணன் என்போம்”

எனப் பாடுகிறார்.

## சக்தியே உலகத் தொடக்கம்

சக்தி என்ற சொல் உமை, திருமகள், சரஸ்வதி மூவரையும் தனித்தனியாகவும் சேர்த்தும் குறிப்பிடுகிறார். பாரதி,

“பத்துப் படைகொளும் பார்வதி தேவியும்

கமலத் திதழ்களில் களித்திடும் கமலையும்

அறிவினை யருளும் வாணியும் அன்னை நீ”

என்று பாடுகின்றார். நவராத்திரிப் பாட்டிலும் வாணி, ஸ்ரீதேவி, பார்வதி மூவரும் சக்தியின் அம்சங்களென்று அவர் வலியுறுத்துகின்றார். பராசக்தியே வையமெல்லாம் நிறைந்திருக்கிறாள் என்றும் உலகில் தனக்குச் சக்தியைத் தவிர வேறு ஆதாரமில்லை எனவும் இப்பாடலில் கூறுவதனைக் காணலாம்.

சக்தி விளக்கம் என்ற பாடலில், அயன், அரி, அரன் ஆகிய மூவருமே பராசக்தியின் அம்சங்கள்தான் என்பதனை,

“மூர்த்திகள் மூன்றுபொரு ளொன்று-அந்த

மூலப் பொருள் ஒளியின் குன்று

நேர்த்தி திகழுமந்த வொளியை-எந்த

நேரமும் போற்று சக்தியென்று”

என்றும்,

“தவறா துணர்வீர் புவியீர் மாலும்

சிவனும் வானோர் எவரும் ஒன்றே

ஒன்றே பலவாய் நின்றோர் சக்தி

என்றுந் திகழும் குன்றா வொளியே”

என்றும் கூறுகின்றார்.

## அன்னையை வேண்டுதல்

நமக்கு வேண்டியனவற்றை நாம் கேட்காமலேயே அன்பாகப் பொழிந்து தருபவள் அன்னையே. ஆதலால் அன்னையிடம் தனக்குரிய வேண்டுதல்களை,

“எண்ணிய முடிதல் வேண்டும்,

நல்லவே எண்ணல் வேண்டும்.

திண்ணிய நெஞ்சம் வேண்டும்.

தெளிந்த நல்லறிவு வேண்டும்,

பண்ணிய பாவமெல்லாம்

பரிதிமுன் பனியே போலே,

நண்ணிய நின்முன் இங்கு

நசித்திட வேண்டும் அன்னாய்!"

என்று கேட்கின்றார் பாரதியார். தாயானவள் தன் குழந்தைக்கு நல்லது எது, தீயது எது என்பதனை அறிந்தறிந்து செய்து தருகின்றாள். அன்னையின் அன்பை போன்றது சக்தியின் ஆற்றலும், அருளும் என்பதனை,

"நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி

நலத்தை நமக்கிழைப் பாள்,

அல்லது நீங்கும் என்றே யுலகேழும்

அறைந்திடுவாய் முரசே!

சொல்லத் தகுந்த பொருளன்று காண்! இங்கு

சொல்லு மவர் தமையே!

அல்லல் கெடுத்தம ராக்கிணை யாக்கிடும்

ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்" .

என்று குறிப்பிடுகின்றார் பாரதியார்

## சக்தியிடம் வேண்டுதல்

பாரதியார் தனது கட்டுரைகளிலும், பாடல்களிலும் பல இடங்களிலும் சக்தியை வியந்து போற்றுவதோடு, காலத்திற்குப் பொருந்த வரும் வகையில் சக்தியை வியந்தும் போற்றியும் பாடும் பாடுகின்றார். சக்தியிடம் வேண்டும் வரங்களைப் பாரதியார் பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுவதோடு, சக்தியால் இவ்வையகம் புதுப்பொலிவு பெற வேண்டும் என்ற பொதுமைநோக்கில் கூறுவது சிந்தித்தற்குரியதாகும்.

"காணி நிலம் வேண்டும் - பராசக்தி

காணி நிலம் வேண்டும்

-------------------------------------

காட்டுவெளியினிலே நின்றன்

காவலுற வேணும்"

இடையறாது கிடைக்க வேண்டும் என்று சக்தியிடம் வேண்டுவதனையும் இப்பாடலில் காணலாம்.

## முடிவுரை

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முப்பெரும் செயல்களைச் செய்தவற்குச் சக்தியின் ஆற்றல் தேவை. ஆகவே, உலகின் எப்பொருள் இயக்கத்திற்கும் சக்தியே இன்றியமையாதது என்று அறிவுறுத்தவும் செய்கின்றார்.

பாரதியார், பெண்கள் மீது கொண்டிருந்த உரிமை வேட்கையும் அவரைச் சக்தியின் மீது பற்றுக் கொள்ளச் செய்துள்ளது. பெண்களுக்கு உரிமைகள் வேண்டும் என்று கேட்கும்போது, அவர் சக்தியாகப் பெண் திகழ்வதனைச் சான்றுகளுடன் காட்டுகின்றார். சிவனும் சக்தியும் சேர்ந்தது தான் உலகம் என்னும் போது, இருவருக்கும் உலகைக் காப்பதில் சம பங்கு இருப்பதனைக் காட்டி, ஆணுக்குள்ள உரிமைகள் அனைத்தும் பெண்ணுக்கும் தரப்பட வேண்டும் என்று கூறுகின்றார்.

சக்தியே அனைத்திற்கும் மூலமாக விளங்குகின்றாள் என்று கூறும் பாரதி, அவள் அறிவைத் தரும்போது கலைமகளாகவும், செல்வத்தைத் தரும்போது திருமகளாகவும், வீரத்தை உணர்வினைத் தரும்போது அன்னை சக்தியாகவும் திகழ்கின்றாள் என்பதனைச் சான்றுடன் கூறுகின்றார்.

## References


Meyyappan, S., (2006) Bharathiar poems, Manivasagar pathipapgam, Chennai, India

Padmanaban, R.A., (1982), Bharathi puthaiyal perunthiratu, Vanathi pathippagam, Chennai, India

Viswanathan, S., (1989) Bharathi songs-First Edition, Pathipu varalaru Veliyedu, Chennai, India

Viswanathan, S., (2013) Bharathi songs-Revised Edition, Pathipu varalaru Veliyedu, Chennai, India



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License